**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.121/2019**

**வா.சா. –1–சௌமியா**

**நாள். 21.01.2025**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு 2006 ஆண்டு திருமணம் ஆனது. எனது சகோதரி 3 ஆம் வாதிக்கு 2010 – 2011 வருடம் திருமணம் நடைபெற்றது. நான் திருமணம் முடித்து பல்லடத்தில் என் கணவர் வீட்டிலும், எனது சகோதரி 3 ஆம் வாதி திருமணம் முடிந்து சென்னையில் அவரது கணவர் வீட்டிலும் வசித்து வருகிறோம். எனது தாயார் ஜனவரி 2019 அன்று இறந்தார். நானும் எனது சகோதரி 3 ஆம் வாதியும் ஏதேனும் விஷசங்களுக்கு மட்டும் தான் எனது தகப்பனார் வீட்டுக்கு வருவோம். எனது தகப்பனாரின் பூர்வீகம் கரூர் மாவட்டம், கடவூர் தாலுகா, கோட்டக்கரை ஆகும். எனது தகப்பனார் வடமதுரையில் வசித்து வரும் போது தான் இறந்தார். வடமதுரையில் உறவினர்கள் யாரும் எங்களுக்கு இல்லை. எனது தகப்பனார் விவசாயம் செய்து வந்தார். இது தவிர மோட்டார் பழுது பார்ப்பது, டிராக்டர் வாடகைக்கு விடுவது போன்ற தொழில்கள் செய்து வந்தார். எனது தகப்பனார் எனது திருமணத்திற்கு முன்பு பொள்ளாச்சியில் எலக்ட்டிரிக்கல் கடை நடத்திவந்தா வகையில் மாதம் ரூ.80,000 மும், விவசாயம், மோட்டார் பழுது பார்ப்பது, டிராக்டர் வாடகைக்கு விடுவது போன்ற தொழில்கள் மூலம் மாதம் ரூ.60,000/– வருமானம் ஈட்டி வந்தார். எனது தகப்பனாருக்கு இந்தியன் ஓவர்சிஸ் வங்கி கடவூர் கிளையில் கணக்கு வைத்திருந்தார். அவர் இறக்கும் வரையில் மேற்படி வங்கியில் கணக்கு வைத்திருந்தார். மத்திய அரசு 2016 நவம்பர் மாதத்தில் ரூ.500 மற்றும் ரூ.1000 பழைய நோட்டுக்கள் செல்லாததாகவும் பழைய நோட்டுகளை வங்கியில் மாற்றி கொள்ளாம் என்று அறிவித்த விபரம் பற்றி எனக்கு தெரியும். எனது தகப்பனார் 15.02.2017 அன்று ரூ.20,00,000/– கடன் தொகையை எனது தகப்பனார் வங்கியில் இருந்து தான் எடுத்து கொடுத்திருக்க முடியும் என்றால், நான் ரூ.6,00,000/– பணம் கொடுத்தேன் எனது தங்கை 3 ஆம் வாதி ஒரு தொகை கொடுத்ததார் அந்த தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது. மீதி எனது தகப்பனாரின் சேமிப்பு தொகை ஆகும். நான் கொடுத்த ரூ.6,00,000/– எனது தந்தையின் சேமிப்பு தொகை ஆகியவற்றை வங்கியில் இருந்து தான் எடுக்கப்பட்டது என்றால் நான் சீட்டு போட்டு தான் வகையில் ரூ.6,00,000/– கையில் வைத்திருந்தேன். அந்த தொகையை பணமதிப்பிழப்பீடு அறிவிப்புக்கு முன்னரே எனது தந்தையிடம் கொடுத்தேன். மேற்படி கடன் கொடுத்தாக சொல்லும் தொகையை வங்கி மூலமாக தான் மாற்றி கொடுத்திருக்க முடியும், அதற்கு மாறாக கொடுத்திருக்க முடியும் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் வங்கி கணக்கு

விபரத்தை வங்கியில் பெற்று கொடுக்க தயாராக உள்ளேனா என்றால் வாங்கி கொடுக்க முடியாது. எனது தகப்பனார் பிரதிவாதிக்கு எந்த வித கடனும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கடவூர் வங்கி கிளையில் ரூ.15,00,000/- கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கடனை எனது தகப்பனார் கட்டவில்லை. நானும் 3 ஆம் வாதி எனது தங்கையும் 2022 ஆண்டு மேற்படி வங்கி கடனை கட்டினேன். நான் சொல்வது போல் ரூ.20,00,000/- கடன் கொடுக்கும் வகைக்கு என் தந்தைக்கு வருமானம் இல்லை என்றாலும் மேற்படி தொகையை கடனாக கொடுக்கும் அளவுக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. வங்கியில் கடன் வாங்கி செலுத்த முடியாத நிலையில் இருந்த என் தகப்பனார் ரூ.20,00,000/- கடன் கொடுத்தார் என்பது நம்ப முடியவில்லை என்றால் சரியல்ல. திண்டுக்கல் மாவட்டம், வடமதுரையில் உள்ள ராஜலெட்சுமி என்பவரை எனக்கு தெரியாது. அவர் கணவரையும் எனக்கு தெரியாது, அவர் மகளையும் எனக்கு தெரியாது. தாவா பிரதிவாதி ராஜலெட்சுமி என்பவரிடம் சீட்டுக்கடனுக்காக எழுதிக்கொடுத்த நிரப்பப்படதா புரோநோட்டை பயன்படுத்தி மேற்படி ராஜலெட்சுமி அவரது குடும்பத்தினர் அரசு அதிகாரி என்பதால் அவர்கள் நேரடியாக வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்பதால், என் தகப்பனார் மேற்படி ராஜலெட்சுமியிடமிருந்து பிரதிவாதி எழுதிக்கொடுத்திருந்த புரோநோட்டை பயன்படுத்தி மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. ராஜலெட்சுமியிடமிருந்து புரோநோட்டை எழுதிக்கொடுக்கும் போது கொடுக்க வேண்டிய ரூ.40,000/- பிரதிவாதி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு என் தகப்பனார் யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. பிராதில் சொல்லியுள்ளவாறு பிரதிவாதி 15.02.2017 அன்று எவ்விதமான தொகையையும் பெறவில்லை என்றாலும், அதன் பேரில் புரோநோட்டு எழுதவில்லை என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை - இல்லை.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.01.22 11:55:02 +0530

Additional District Judge(FAC),

Dindigul.